## வகுப்பு - 8 - குடிமையியல்,
## 4. மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும்

36. தமிழ்நாடு மனித உரிமைகள் ஆணையத் தலைமையகம் அமைந்துள்ள இடம்

(1) புதுடெல்லி (2) சென்னை (3) மும்பை (4) கொல்கத்தா

37. தவறான கூற்றைக் கண்டறியவும்.

தேசிய மனித உரிமைகள் ஆணையம் என்பது

(1) ஒரு சட்ட ரீதியான அமைப்பு. (2) ஓர் அரசியலமைப்பு சார்ந்த அமைப்பு

(3) ஒரு சுதந்திரமான அமைப்பு. (4) பலதரப்பு நிறுவனங்களைக் கொண்டது.

38. தேசிய மனித உரிமைகள் ஆணையத் தலைவரின் பதவிக்காலம் என்ன?

(1) 5 ஆண்டுகள் அல்லது 62 வயது வரை.

(2) 5 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை

(2) 6 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை.

(4) 5 ஆண்டுகள் அல்லது 70 வயது வரை.

39. பெண்களின் திருமண வயது 21 என நிர்ணயித்த சட்டம் ______.

(1) பெண்கள் சொத்துரிமைச்சட்டம் (2) இந்து திருமணச்சட்டம்

(3) குழந்தைத் தொழிலாளர் சட்டம் (4) கல்வி உரிமைச் சட்டம்

40. பெண்களைப் பாதுகாக்கும் வகையில் குடும்ப வன்முறைத் தடுப்புச்சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

(1) 2002 (2) 2005 (3) 2015 (4) 1995

41. உலக மனித உரிமைகள் தினம் டிசம்பர் 10ல் கொண்டாடப்படுவதற்கான காரணம் ______.

(1) ஐ.நா.சபை உருவான நாள்

(2) இரண்டாம் உலகப்போர் முடிவுற்ற நாள்

(3) எலினார் ரூஸ்வெல்ட் பிறந்த நாள்

(4) ஐ.நா.சபை மனித உரிமைப் பிரகடனத்தை வெளியிட்ட நாள்

42 பின்வரும் கூற்றுகளை ஆராய்க.

LIVEWORKSHEETS

கூற்று (i): மனித உரிமைகள் என்பவை ஒவ்வொரு மனிதருக்குமான சமத்துவம் மற்றும் கண்ணியம் பற்றியதாகும்.

கூற்று (ii): பெற்றோரின் பூர்வீகச் சொத்துகளில் பெண் குழந்தைகளுக்கும் சம உரிமை உண்டு.

கூற்று (iii): தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் பொறுப்பினை இந்தியப் பிரதமரே ஏற்றுள்ளார்.

கூற்று (iv): வயதான பெற்றோரைப் பராமரித்துக் காப்பாற்றுவது அவர்களது பிள்ளைகளின் கடமையாகும்.

(1) i, ii சரி, iii, iv தவறு
(2) i, ii, iii சரி, iv தவறு
(3) i, ii, iv சரி, iii தவறு
(4) i, ii தவறு, iii, iv சரி

43. கீழ்க்காணும் கூற்றுகளில் தவறான கூற்றுகள் எவை?

i. மனித உரிமைகள் மற்றும் வாழ்வியல் உரிமைகள் ஒரே மாதிரியானவை.

ii. மனித உரிமைகள் - பிறப்பின் அடிப்படையில் இயற்கையாக அமையப் பெற்ற உரிமைகள்.

iii. மனித உரிமைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகத் தேசிய, மாநில அளவிலான மனித உரிமைகள் ஆணையம் நிறுவப்பட்டுள்ளது.

iv. பாதிக்கப்பட்டவர்களுக்குத் தண்டனை வழங்க, தேசிய மனித உரிமைகள் ஆணையம் அதிகாரம் பெற்றுள்ளது.

(1) i, iv
(2) i, iii
(3) ii, iv
(4) i, ii

44. சிவில் அல்லது வாழ்வியல் உரிமைகள் ______ அடிப்படையில் அமையப் பெற்றவை ஆகும்.

(1) அதிகாரத்தின்
(2) அரசியல் அமைப்புச் சட்டத்தின்
(3) இயற்கை நியாயத்தின்
(4) ஆட்சி செய்வோர் விருப்பத்தின்

45. எது தவறான கூற்று? மனித உரிமை அமைப்புகள் என்பவை ______.

(1) அரசாங்கங்களின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கின்றன.

(2) மனித உரிமைகளை மதிக்கும்படி வலியுறுத்துகின்றன.

LIVEWORKSHEETS

(3) மனித உரிமைகளுக்குச் சட்ட அங்கீகாரம் கிடைக்க முயற்சி செய்கின்றன.

(4) நாடுகளுக்கிடையே வர்த்தகம் செய்கின்றன.

46. பொருத்துக.

(i) ஐ.நா.சபை மனித உரிமைப் பிரகடனம் - A. 1997

(ii) இந்திய மனித உரிமைகள் ஆணையம் - B. 2012

(iii) போக்சோ சட்டம் - C. 1993

(iv) தமிழ்நாடு மனித உரிமைகள் ஆணையம் - D. 1948

(1) i - A ii - C iii - D iv - B

(2) i - A ii - B iii - D iv - C

(3) i - C ii - D iii - A iv - B

(4) i - D ii - C iii - B iv - A

47. கீழ்க்காணும் கூற்றுகளில் சரியான கூற்று/ கூற்றுகள் எவை?

i சிவில் உரிமைகள் என்பன பிறப்புடன் உள்ளார்ந்த அடிப்படை உரிமைகளாகும்.

ii குழந்தை ஒரு முக்கியமான தேசியச் சொத்தாகக் கருதப்படுகிறார்கள்..

iii பிரிவு 39(f) குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடை செய்கிறது..

iv 15 வயது பூர்த்தியடையாத எந்த ஒரு குழந்தையையும் வேலைக்கு அமர்த்தலாம்..

(1) i, iv

(2) i, iii, iv

(3) ii மட்டும்

(4) i தவிர அனைத்தும்

48. கூற்று: குழந்தைகள் தேசியச் சொத்தாகக் கருதப்படுகிறார்கள்.

காரணம்: பெற்றோரின் சொத்துகள் குழந்தைகளுக்குச் சென்று சேர்வதால் அவர்கள் தேசியச் சொத்தாக இருக்கிறார்கள்.

(1) கூற்று சரி, காரணம் தவறு

(2) கூற்று காரணம் இரண்டும் சரி

(3) கூற்று தவறு, காரணம் சரி

(4) கூற்று, காரணம் இரண்டும் தவறு

49. 18 வயதுக்குக் கீழுள்ள பெண் குழந்தைக்குத் திருமண ஏற்பாடு செய்யப்பட்டால் அது குறித்து ரகசியமாகப் புகாரளிக்க அழைக்க வேண்டிய தொலைபேசி எண்

(1) 1088

(2) 1098

(3) 1089

(4) 1099

LIVEWORKSHEETS

50. இரண்டாம் உலகப் போருக்குப் பின் மனித உரிமைகளைப் பாதுகாக்க பல நடவடிக்கைகளை எடுத்துள்ள அமைப்பு எது?

(1) ஐ.நா. சபை (2) உச்ச நீதிமன்றம்

(2) சர்வதேச நீதிமன்றம் (4) இவைகளில் எதுவும் இல்லை

51. 1995 ஆம் ஆண்டில் உலகம் முழுவதிலும் இருந்து பெண்கள் கூடிய இடம்

(1) நியூடெல்லி (2) சென்னை (3) பெய்ஜிங் (4) டார்ஜிலிங்

52. மனித உரிமைகளின் "நவீன சர்வதேச மகாசாசனம்" என அழைக்கப்படுவது

(1) மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பு

(2) தேசிய மனித உரிமைகள் ஆணையம்

(3) மாநில மனித உரிமைகள் ஆணையம்

(4) சர்வதேசப் பெண்கள் ஆண்டு

53. பொருத்துக. [NMMS-2016]

(a) டிசம்பர் 10 - (i) ஐ.நா. தினம்

(b) அக்டோபர் 24 - (ii) உலக மக்கள் தொகை தினம்

(c) ஜூலை 11 - (iii) உலக எழுத்தறிவு தினம்

(d) செப்டம்பர் 8 - (iv) மனித உரிமைகள் தினம்

(1) (a)-(ii), (b)-(iv), (c)-(i), (d)-(iii) (2) (a)-(iv), (b)-(iii), (c)-(i), (d)-(ii)

(3) (a)-(iv), (b)-(i), (c)-(iii), (d)-(ii) (4) (a)-(iv), (b)-(i), (c)-(ii), (d)-(iii)

54. இனம், பாலினம், தேசிய இனம், மொழி மற்றும் சமய வேறுபாடுகளின்றி அனைத்து மனிதர்களுக்குமான இயல்பான உரிமைகள் _______ ஆகும்.

(1) வாழ்வியல் உரிமை (2) சமூக உரிமை

(3) மனித உரிமை (4) கலாச்சார உரிமைகள்

55. கீழ்க்காணும் கூற்றுகளில் சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின் தொகுப்பானது,

LIVEWORKSHEETS

(1) ஐரோப்பிய மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் வேரூன்றி இருந்தது.

(2) அமெரிக்க மற்றும் இந்திய நாடுகளில் வேரூன்றி இருந்தது.

(3) ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளில் வேரூன்றி இருந்தது.

(4) அமெரிக்க மற்றும் ஆஸ்திரேலிய நாடுகளில் வேரூன்றி இருந்தது.

56. உலகிலேயே முதன்முதலில் "ஒரு நாட்டை ஆளும் அரசரையும் சட்டத்திற்கு உட்படுத்திச் சாசனம்" எழுதிய நாடு ______.

(1) இங்கிலாந்து (2) அமெரிக்கா (3) இந்தியா (4) பிரான்ஸ்

57. உலகிலேயே முதன்முதலில் "சட்டத்தின் முன் அனைவரும் சமம்" என்று கூறிய சாசனம் இயற்றப்பட்ட நாடு ______.

(1) இங்கிலாந்து (2) அமெரிக்கா (3) இந்தியா (4) பிரான்ஸ்

58. சரியான கூற்றை / கூற்றுகளைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) மாநில மனித உரிமைகள் ஆணையம் அரசியலமைப்பின் 7 வது அட்டவணையின் கீழுள்ள சில துறைகளில் மனித உரிமை மீறல்களை விசாரிக்கும் .

(2) மாநில மனித உரிமைகள் ஆணையம் ஒரு தலைவர் மற்றும் மூன்று உறுப்பினர்களைக் கொண்டது ஆகும்.

(3) 1 மற்றும் 2 (4) எதுவுமில்லை

59. சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும். (NMMS-2018)

(1) ஐ.நா. தினம் - மார்ச் 8

(2) சர்வதேச பெண்கள் தினம் - நவம்பர் 19

(3) மனித உரிமைகள் தினம் - டிசம்பர் 10

(4) தேசிய ஒருமைப்பாட்டு தினம் - அக்டோபர் 24

.60. தேசிய மனித உரிமைகள் ஆணையம் குறித்த பின்வரும் எந்தக் கூற்றுச் சரியானது அன்று?

(1) இது 1993 இல் நிறுவப்பட்டது.

LIVEWORKSHEETS

(2) மனித உரிமை மீறல் வழக்குகளில் குற்றவாளியைத் தண்டிக்க எந்த உரிமையும் இல்லை

(3) இந்த ஆணையத்தின் தலைவரும் உறுப்பினர்களும் இந்திய உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

(4) இந்த ஆணையம் தனது ஆண்டு அறிக்கையை மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கு அனுப்புகிறது.

61. சிறார் உதவித் தொடர்பு (Child helpline) எண் _______. (NMMS-2015-16)

(1) 4172 (2) 1091 (3) 139 (4) 1098

62. ஐக்கிய நாடுகள் சபையின் சாசனச் சட்டம் உருவாக்கப்பட்ட மாநாடு _______.

(1) வட்டமேசை மாநாடு (2) பிரான்ஸ் மாநாடு

(3) சான்பிரான்சிஸ்கோ மாநாடு (4) இங்கிலாந்து மாநாடு

63. "உலக மனித உரிமைகள் வரலாற்றில் ஒரு மைல்கல்" என்று அழைக்கப்படுவது

(1) ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றம்

(2) உலக பொது நீதிமன்றம் உருவானது.

(3) உலக பொது சுகாதார நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது.

(4) உலக மனித உரிமைகள் அறிவிப்பு ஐ.நா.வால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

64. "உலக மனித உரிமைகள் பிரகடனம்" வெளியிடப்பட்ட இடம் _______.

(1) பாரிஸ் நகரம் (2) புதுடில்லி (3) டோக்கியோ (4) வாஷிங்டன்

65. பொருத்துக.

i. சட்டப்பிரிவு 24 - 1. ஆரோக்கியமாகக் குழந்தைகள் வளர வழி செய்தல்.

ii. சட்டப்பிரிவு 39 (F) - 2. இலவசக் கட்டாயக் கல்வி (6 - 14 வயது வரை).

iii. சட்டப்பிரிவு 45 - 3. குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடை செய்தல்..

iv. சட்டப்பிரிவு 21A - 4. 6 வயது வரை குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்வி.

| | i | ii | iii | iv | | i | ii | iii | iv |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | 2 | 4 | 1 | 3 | (2) | 3 | 1 | 4 | 2 |

LIVEWORKSHEETS

(3) 2 3 1 4 (4) 3 4 1 2

66. “மக்கள் அனைவருக்கும் தங்களின் சொந்த மதத்தைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உண்டு” என்று கூறியவர் ______.

(1) அலெக்சாண்டர் (2) சாக்ரடீஸ் (3) மகா சைரஸ் (4) கன்பூசியஸ்

67. “மகா சைரஸ்” என்ற மன்னரால் செதுக்கப்பட்ட “சைரஸ் சிலிண்டரில்” பயன்படுத்தப்பட்ட எழுத்துக்கள் ______.

(1) சீன எழுத்துக்கள் (2) கியூனிபார்ம் எழுத்துக்கள்

(3) தமிழ் எழுத்துக்கள் (4) ஆங்கில எழுத்துக்கள்

68. பாரசீக மன்னர் “மகா சைரஸ்” ஆல் செதுக்கப்பட்ட சைரஸ் சிலிண்டரில் பயன்படுத்தப்பட்ட மொழி ______.

(1) தமிழ் (2) ஆங்கிலம்

(3) பிரெஞ்சு மொழி (4) அக்காடியன் மொழி

69. ஐநா சபையின் 6 அலுவல் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள ஒரே ஆவணம் ______.

(1) சைரஸ் சிலிண்டர்

(2) மொகஞ்சதாரோ எழுத்துகள்

(3) இந்திய அரசின் நிதிநிலை அறிக்கை

(4) இவற்றில் எதுவும் இல்லை

70. கல்வி உரிமைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு? (NMMS 2019-20)

(1) 2008 (2) 2009 (3) 2010 (4) 2011

LIVEWORKSHEETS